# கிறிஸ்தவர்கள் வேலைக்குச் செல்லும் பொழுது [6:5-9]

*கிறிஸ்தவராயிருப்பது என்றால், நாம் வேலை செய்யும் வழிமுறை உட்பட, வாழ்வின் ஒவ்வொரு பகுதியிலும் கிறிஸ்து நம்மை வடிவமைக்கின்றார் என்று அர்த்தப்படுகின்றது. அடிமைகள் தங்கள் எஜமானர்களுக்குப் பணி செய்வது குறித்து பவுல் அவர்களுக்கு அறிவுறுத்துதல் அளித்தார். அந்த அறிவுறுத்தலில் நாம் பணியாளர்களுக்கு உதவியான சில அறிவுரைகளைக் காண முடியும்:*

> *வேலைக்காரரே, நீங்கள் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறபோல, சரீரத்தின்படி உங்கள் எஜமான்களாயிருக்கிறவர்களுக்கும் பயத்தோடும் நடுக்கத்தோடும் கபடற்ற மனதோடும் கீழ்ப்படிந்து, மனுஷருக்குப் பிரியமாயிருக்க விரும்புகிறவர்களாகப் பார்வைக்கு ஊழியஞ் செய்யாமல், கிறிஸ்துவின் ஊழியக்காரராக, மனப்பூர்வமாய்த் தேவனுடைய சித்தத்தின்படி செய்யுங்கள். அடிமையானவனானாலும், சுயாதீனமுள்ளவனானாலும், அவனவன் செய்கிற நன்மையின்படியே கர்த்தரிடத்தில் பலனை அடைவானென்று அறிந்து, மனுஷருக்கென்று ஊழியஞ்செய்யாமல், கர்த்தருக்கென்றே நல்மனதோடே ஊழியஞ் செய்யுங்கள். எஜமான்களே, அப்படியே நீங்களும், வேலைக்காரருக்குச் செய்ய வேண்டியவைகளைச் செய்து, அவர்களுக்கும் உங்களுக்கும் எஜமானானவர் பரலோகத்தில் இருக்கிறாரென்றும், அவரிடத்தில் பட்சபாதம் இல்லையென்றும் அறிந்து, கடுஞ்சொல்லை விட்டுவிடுங்கள் (6:5-9).*

*இந்த வசனங்கள் "ஆவியினால் நிறைந்து" (5:18) என்ற பவுலின் கட்டளைகளின் சந்தர்ப்பப் பொருளில் புரிந்து கொள்ளப்பட வேண்டும். கிறிஸ்தவர்கள் தேவனுடைய பரிசுத்த ஆவியின் செல்வாக்கின் கீழ் வாழும்படிக்குப் பவுல் அழைத்தார். இது தேவனுடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிதலைப் பற்றிய விஷயமாக உள்ளது. இது நமக்குள் அவருடைய வசனங்கள் வாழும்படி அனுமதிப்பதை உள்ளடக்கி இருக்கின்றது. ஆவியினால் நிறைந்திருப்பதின் சில விளைவுகளைப் பவுல் பட்டியலிட்டார்: சங்கீதங்கள், கீர்த்தனைகள் மற்றும் ஞானப்பாடல்களின் மூலம் ஆவிக்குரிய செய்தித் தொடர்பு; எல்லாவற்றிற்காகவும் தேவனுக்கு நன்றி செலுத்துதல்; மற்றும் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிதல். இந்தக் கீழ்ப்படிதல் கணவர்களையும்*

மனைவியர்களையும், பெற்றோர்களையும் பிள்ளைகளையும் மற்றும் அடிமைகளையும் வேலைக்காரர்களையும் உள்ளடக்கியிருக்கின்றது.

சந்தர்ப்பப் பொருளைத் தவறாகப் புரிந்து கொள்ளாதீர்கள். பணியிடங் களுக்கான அறிவுறுத்தல்கள் ஆவியானவரால் நிரப்பப்பட்டிருத்தலில் இருந்து நேரடியாகப் பாய்ந்தோடி வருகின்றது. வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், வேலை(செய்கை)யில் நாம் கிறிஸ்தவர்களாய் இருக்கத் தவறினால், நம்மில் எவரும் தேவன் விரும்புகின்றவாறு கிறிஸ்தவர்களா யிருப்பதாக உரிமைகோர முடியாது. கிறிஸ்தவர்கள் உண்மை நிறைந்த வேலைக்காரர்களாய்ப் பணியாற்றும் போது ஆவியானவரால் நிரப்பப் பட்ட தங்கள் வாழ்வைக் காண்பிக்கின்றனர்.

## உண்மை நிறைந்த வேலைக்காரர்கள்

பவுல், அடிமைகளுக்கும் எஜமானர்களுக்கும் இடையில் உள்ள உறவு முறையைத் திட்டவட்டமாக எடுத்துரைக்கின்றார். அவரது நாட்களில், அது ஒரு அடிப்படையான பணியிட உறவுமுறையாக இருந்தது. விரிவாக்கத் தினால் நாம் இதை தற்காலத்து வேலையளிப்பவர்/வேலை செய்பவர் உறவுமுறைகளுக்கு நடைமுறைப்படுத்தலாம். வேலை செய்பவர்களுக்கு பவுல் நான்கு அறிவுறுத்தல்களைக் கொடுத்தார்.

1. *கீழ்ப்படிதல் உள்ளவர்களாயிருங்கள்.* பவுல், “வேலைக்காரர்களே, சரீரத்தின்படி உங்கள் எஜமானர்களாயிருப்பவர்களுக்குக் கீழ்ப்படியுங்கள் ...” (6:5) என்று கூறுகின்றார். இது ஒரு நிலைத்த எண்ணப்போக்காக இருக்க வேண்டும். தொடர்ந்து நடைபெறும் கீழ்ப்படிதலை வலியுறுத்துகின்ற வினைச் சொல்லின் காலத்தைப் பவுல் இங்கு பயன்படுத்தினார். வேலையளிப்பவர் சட்டத்திற்கு விரோதமான, ஒழுக்கக் கேடான அல்லது தேவனால் வெளிப்படுத்தப்பட்ட சித்தத்திற்கு எதிரானவற்றைச் செய்யும் படி கேட்டுக் கொள்ளாத வரைக்கும் வேலையளிப்பவரின் அறிவுறுத்தல்கள் மற்றும் வேண்டுகோள்கள் ஆகியவற்றுக்குத் தடங்கலற்ற வகையில் இணங்கியிருத்தல் என்பதை அப்போஸ்தலர் தம் சிந்தையில் கொண்டிருந் தார். வேலையளிப்பவர்களில் சிலர் நியாயமற்றவர்களாக, ஞானமற்றவர் களாக, வேலைநோக்கமற்றவர்களாக, கடுமையானவர்களாக, மதியீனமான வர்களாகக் கூட இருக்கக் கூடும்; ஆனால் கிறிஸ்தவ வேலைக்காரர்கள் தங்களை வேலைக்கு அமர்த்தியவர்களிடத்தில் தங்களால் இயன்ற அளவுக்குச் சிறந்த வகையில் நடந்து கொள்ள வேண்டும். 1 பேதுரு 2:18-20ல் நாம் பின்வருமாறு வாசிக்கின்றோம்:

> வேலைக்காரரே, அதிக பயத்துடனே உங்கள் எஜமான்களுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; நல்லவர்களுக்கும் சாந்த குணமுள்ளவர்களுக்கும் மாத்திரம் அல்ல, முரட்டுக் குணமுள்ளவர்களுக்கும் கீழ்ப்படிந்திருங் கள். ஏனெனில், தேவன்மேல் பற்றுதலாயிருக்கிற மனச்சாட்சியினி மித்தம் ஒருவன் அநியாயமாய்ப் பாடுபட்டு, உபத்திரவங்களைப் பொறுமையாய்ச் சகித்தால் அதுவே பிரீதியாயிருக்கும். நீங்கள் குற்றஞ் செய்து அடிக்கப்படும்போது பொறுமையோடே சகித்தால், அதினால்

*என்ன கீர்த்தியுண்டு? நீங்கள் நன்மைசெய்து பாடுபடும்போது பொறுமையோடே சகித்தால் அதுவே தேவனுக்கு முன்பாகப் பிரீதியாயிருக்கும்.*

*நமது பணிகள் ஏற்புடையதாயில்லையென்றால், இரட்சிப்புக்கான நமது செய்திக்கு மக்கள் அதிக கவனம் தர மாட்டார்கள். பணியில் நாம் மிகப் பெரிதாக முறையிடுகின்றவர்களாயிருந்தால், நாம் அளிக்க வேண்டிய வற்றை அவர்கள் (காதினாலும்) கேட்க மாட்டார்கள். நாம் பிறருக்காக வேலை செய்கின்ற வரைக்கும், கீழ்ப்படிதல் மற்றும் ஒப்புக் கொடுத்தலின் ஆவியுடன் நம்மால் இயன்ற அளவுக்குச் சிறப்பாகப் பணியாற்ற வேண்டும்.*

*2. மரியாதைமிக்கவர்களாயிருங்கள். பவுல், "வேலைக்காரரே, நீங்கள் ... சரீரத்தின்படி உங்கள் எஜமான்களாயிருக்கிறவர்களுக்கு(ம்) பயத்தோடும் நடுக்கத்தோடும் கபடற்ற மனதோடும் கீழ்ப்படிந்து ..." என்று கூறினார். வேலையளிப்பவர்கள் சுலபமாய் மதிக்கத்தக்கவர்களாயிருந் தாலும் இல்லாவிட்டாலும் கிறிஸ்தவ வேலைக்காரர்கள் (அவர்களை) மதிக்கின்றவர்களாயிருக்க வேண்டும். இது நபரைப் பற்றியதல்ல, இது தேவனுடைய திட்டம். அதிகாரத்திற்குக் கீழ்ப்படியும்படியாகவே தேவனு டைய திட்டம் அழைக்கின்றது. வாழ்வின் இழையில் தேவன் அந்தத் திட்டத்தை கட்டியிருக்கின்றார். அதிகாரத்துவத்தின் கொள்கைகளுக்கு எதிராக மக்கள் கலகம் செய்வதைத் தேர்ந்து கொண்டால் சமூகம் செயல்பட முடியாது. கணவன் மனைவி, பெற்றோர் பிள்ளைகள், அல்லது வேலை தருபவர் வேலை செய்பவர் என்ற யாராயிருப்பினும் அதிகாரத்துவக் கொள்கை மற்றும் கீழ்ப்படிதல் என்பவை நடைமுறைக்குரியதாயிருக் கின்றது. இதை நாம் புறக்கணித்தால், பல பிரச்சனைகள் மேல் எழும்பும். உண்மைமிக்க கிறிஸ்தவர் தேவனுடைய அமைப்பின் மீது கொண்ட மதிப்பினால் கீழ்ப்படிகின்றார். இதை அவர், முறையிடுதல், விமர்சித்தல், அல்லது அமைப்பிற்கு எதிராகக் கலகம் செய்தல் ஆகியவையற்ற நிலையில் செய்கின்றார்.*

*3. உங்கள் நோக்கத்தைத் தூயதாகக் காத்துக் கொள்ளுங்கள். வேலையளிப்பவருக்குக் கீழ்ப்படிவதன் நோக்கம் என்ன? நாம் கிறிஸ்துவுக் குக் கீழ்ப்படிவது போலவே நமது பூமிக்குரிய எஜமானர்களுக்கும் கீழ்ப்படிய வேண்டும் என்று கர்த்தர் எதிர்பார்க்கின்றதாகப் பவுல் கூறினார் (6:5). நமது பணி உட்பட நாம் இந்த வாழ்வில் செய்கின்ற ஒவ்வொரு செயலும் கர்த்தரை மகிமைப்படுத்துவதாக இருக்க வேண்டும்: "ஆகையால் நீங்கள் புசித்தாலும், குடித்தாலும், எதைச் செய்தாலும், எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்காகவே செய்யுங்கள்" (1 கொரி. 10:31); "வார்த்தை யினாலாவது கிரியையினாலாவது, நீங்கள் எதைச் செய்தாலும், அதையெல் லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலை யாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரியுங்கள்" (கொலோ. 3:17); "நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்துவைச் சேவிக்கிறதினாலே, சுதந்தரமாகிய பலனைக் கர்த்தராலே பெறுவீர்களென்று அறிந்து, எதைச் செய்தாலும் அதை*

*மனுஷர்களுக்கென்று செய்யாமல், கர்த்தருக்கென்றே மனப்பூர்வமாய்ச் செய்யுங்கள்" (கொலோ. 3:23, 24).*

*உங்கள் வேலை இன்றியமையாதது அல்ல என்பது போல நீங்கள் உணரலாம். நீங்கள் செய்கின்றது உங்களுக்குப் பிடிக்காமல் இருக்கலாம். உங்களை வேலைக்கு அமர்த்தியவரை உங்களுக்குப் பிடிக்காது இருக்கலாம். இருப்பினும் உங்கள் வேலையை தேவனுக்கான ஒரு பலியாகக் கண்ணோக் குவதினால் நீங்கள் கர்த்தரை மகிமைப்படுத்த முடியும். அதை நீங்கள் தேவனுடைய மகிமைக்காகச் செய்யுங்கள். அதுவே உங்கள் வேலைக்கும் உங்களை வேலையில் அமர்த்தியவருக்கும் மிகச் சிறந்தவற்றை நீங்கள் கொடுக்கக் காரணமாயிருக்கட்டும்.*

*4. மிக மேன்மையான தன்மைக்கு ஒப்புக் கொடுத்தவர்களாயிருங்கள். நாம் யாவரும் கூறுகின்றதும் செய்கின்றதுமான எல்லாமே தேவனை மகிமைப்படுத்துவதற்கானதாக இருப்பதால், வேலை செய்யுமிடத்தில் நாம் மிக மேன்மையான தன்மைக்கு ஒப்புக் கொடுத்தவர்களாயிருக்க வேண்டும். பவுல் கிறிஸ்துவை நிலையாகச் சித்தரிப்பில் கொண்டு வருவதன் மூலம் இதை வலியுறுத்தினார். நாம் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிவது போலவே பூமிக்குரிய நமது எஜமானர்களுக்கும் கீழ்ப்படிய வேண்டும் (6:5). அவர் (பவுல்) வசனம் 6ல், "மனுஷருக்குப் பிரியமாயிருக்க விரும்புகிறவர்களாகப் பார்வைக்கு ஊழியஞ் செய்யாமல், கிறிஸ்துவின் ஊழியக்காரராக, மனப்பூர்வமாய்த் தேவனுடைய சித்தத்தின்படி செய்யுங்கள்'' என்று கூறினார். மிக மேன்மையான தன்மைக்கான வேண்டுகோளானது வசனம் 7லும் காணப்படுகின்றது: ''மனுஷருக்கென்று ஊழியஞ் செய்யால், கர்த்தருக்கென்றே நல்மனதோடே ஊழியஞ் செய்யுங்கள்."*

*உயர் நிலைப் பள்ளியில் நடக்கும் உடற்பயிற்சி வகுப்புகள் என் நினைவிற்கு வருகின்றது. அந்த வகுப்பின் போது ஒவ்வொரு நாளும் உடற் பயிற்சி செய்யும்படி நாங்கள் கேட்டுக் கொள்ளப்பட்டோம். பயிற்சியாளர் (மாணவர்கள்) குழுவின் நடுவில் நின்ற ஒவ்வொரு வேளையிலும் அவரால் வகுப்பின் பாதிப் பேர்களை மட்டுமே பார்க்க முடிந்தது. அவர் வலது புறம் திரும்பிப் பார்க்கையில், வலது புறம் இருக்கும் ஒவ்வொருவரும் மிகத் தீவிர மாக உடற்பயிற்சி செய்வதுண்டு; ஆனால் இடப்புறத்தில் இருப்பவர்கள் சற்றே ஓய்வெடுத்துக் கொள்வார்கள். அவர் இடது புறம் திரும்பிப் பார்க்கை யில், இடது புறம் இருப்பவர்கள் கடினப்பட்டு உடற்பயிற்சி செய்வதுண்டு; ஆனால் வலது புறத்தில் இருப்பவர்கள் சற்றே ஓய்வெடுத்துக் கொள்வார் கள். வேலை செய்யும் இடங்களில் சில நேரங்களில் இது நடைபெறுகின்றது. சில வேலையாட்கள் முதலாளி இருக்கும் போது மட்டும் மிகச் சிறந்த முறையில் முயற்சி செய்வதுண்டு. இவர்கள் மிக மேன்மையான தன்மைக் குத் தங்களை ஒப்புக் கொடுத்தலில் குறைவு படுகின்றனர்.*

*தேவன் ஒரு பணியாளராயிருக்கின்றார் என்பதை ஆதியாகமம் 1ம் அதிகாரம் காண்பிக்கிறது. அவர் இந்த உலகத்தைப் படைத்தார். அவர் தமது வேலையில் மிக மேன்மையான தன்மைக்குத் தம்மை ஒப்புக் கொடுத்த வராயிருந்தார். "அப்பொழுது தேவன் தாம் உண்டாக்கிய எல்லாவற்றையும் பார்த்தார், அது மிகவும் நன்றாயிருந்தது" (ஆதி. 1:31). கிறிஸ்தவர்கள்*

எப்பொழுதுமே கடினமாய் உழைத்து தங்களால் இயன்ற அளவுக்குச் சிறப்பாகச் செய்ய வேண்டும். அவர்கள் எங்கு பணியாற்றினாலும் மிகவும் ஒப்புக்கொடுத்தல் உள்ளவர்களாயிருக்க வேண்டும். ஜான் ஸ்டாட் அவர்கள் பின்வரும் ஆலோசனையைத் தந்தார்:

> ஒரு இல்லத் தலைவியினால், இயேசு உணவு உண்ணப் போகின்றார் என்ற எண்ணத்துடன் உணவு சமைக்க முடியும், அல்லது இயேசு கிறிஸ்து மதிப்பிற்குரிய விருந்தினராக வரப் போகின்றார் என்ற எண்ணத்துடன் வீட்டை சுத்தம் செய்ய முடியும். ஆசிரியர்கள் மாணவர்களுக்குக் கல்வி போதித்தல், மருத்துவர்கள் நோயாளிகளுக்குச் சிகிட்சையளித்தல் மற்றும் மருத்தவத் தாதிகள் அவர்களைக் கவனித்தல், வழக்கறிஞர்கள் தங்கள் கட்சிக்காரருக்கு உதவுதல், கடை உதவியாளர்கள் வாடிக்கையாளர்களுக்குப் பணியாற்றுதல், கணக்காளர்கள் கணக்குப் புத்தகங்களைச் சரி பார்த்தல் மற்றும் செயல் உதவியாளர்கள் கடிதங்களைத் தட்டச்சு செய்தல் போன்ற ஒவ்வொரு வேலையிலும் அவர்கள் இயேசு கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்வது போல் செயல்பட முடியும்.[1]

## மதிக்கின்ற எஜமானர்கள்

கிறிஸ்தவர்கள் மதிக்கின்ற வேலை தருபவர்கள் என்ற வகையிலும் ஆவியினால் நிரப்பப்பட்ட தங்கள் வாழ்வைக் காண்பிக்கின்றனர். எஜமானர்கள் அல்லது வேலை தருபவர்களுக்குப் பவுல் என்ன கூறினார் என்பதை சுருக்கமாகக் கண்ணோக்குங்கள்: "எஜமான்களே, அப்படியே நீங்களும், வேலைக்காரருக்குச் செய்ய வேண்டியவைகளைச் செய்து, அவர்களுக்கும் உங்களுக்கும் எஜமானானவர் பரலோகத்தில் இருக்கிறாரென்றும், அவரிடத்தில் பட்சபாதம் இல்லையென்றும் அறிந்து, கடுஞ்சொல்லை விட்டுவிடுங்கள்" (6:9).

இன்றைய நாட்களில் வேலை தருபவர்களால் பின்பற்றப்பட வேண்டிய வழிநடத்தும் குறிப்புகள் மூன்றைப் பவுல் கொடுத்தார்:

1. கீழ்ப்படிதல் உள்ளவர்களாயிருங்கள். அவர், "அப்படியே நீங்களும் வேலைக்காரருக்குச் செய்ய வேண்டியவைகளைச் செய்து" என்று கூறினார். "அப்படியே" என்பது, அவர் (பவுல்) வேலைக்காரர்களுக்கு முன் அமைத்த நீங்கள் சொல்வது அல்லது செய்வது எல்லாவற்றிலும் கர்த்தரை மகிமைப் படுத்துங்கள் என்றனநோக்கம் அல்லது இலக்கைக் குறிப்பிடுகின்றது என்றே நான் புரிந்து கொள்கிறேன். இதை வேலை தருபவர் என்ற வகையில் உங்கள் முதல் பொறுப்பாகத் தேவன் ஏற்படுத்தியுள்ளார். நீங்கள் தேவனை மகிமைப்படுத்தும் வகையில் வழிநடத்தவும். உங்களுக்குப் பதில் அளிப்பவர்களை தேவனுடைய தர அளவையின்படி இயக்கவும், பொன் விதியின் (லூக். 6:31ஐக் காணவும்)படி இயங்கவும் மற்றும் வேலை செய்கின்றவர்கள் நீங்கள் சேவிக்கின்ற தேவனை அவமதிப்பதற்குக் காரணம் கொண்டிராத வகையில் அவர்களை நீங்கள் மதிப்புடன் நடத்த வேண்டுமென்று தேவன் எதிர்பார்க்கின்றார்.

2. இரக்கத்துடன் இருங்கள். நீங்கள் கொடுமைக்காரராக அல்லது பயமுறுத்துபவராக இருக்க வேண்டாம். தேவபக்தியுள்ள தலைமைத்து வமானது யார் முதலாளி என்று ஒவ்வொருவரையும் அறியச் செய்வதை அனுமதிப்பதில்லை. வேலை தருகின்ற கிறிஸ்தவர் ஒருவர் திட்டுபவராக அல்லது மதிக்காதவராக ஒருபோதும் இருக்க மாட்டார், ஆனால் எப்பொழுதும் இரக்கமும் அக்கறையும் உள்ளவராக இருக்க முயற்சி செய்கின்றார். (ஆனால்) இது உங்களை, தேவை ஏற்படும் வேளையில் பிடிவாதத்துடனும் அழுத்தத்துடனும் இருப்பதைத் தடை செய்வதில்லை, ஆனால் உங்கள் எண்ணப்போக்கும் நடக்கையும் எப்பொழுதுமே உங்களில் உள்ள கிறிஸ்துவின் சிந்தையினால் கட்டுப் படுத்தப்பட்டுள்ளன.

3. தாழ்மையுள்ளவர்களாயிருங்கள். பவுல் பின்வரும் நோக்கத்தை முன் வைத்தார்: ''அவர்களுக்கும் உங்களுக்கும் எஜமானானவர் பரலோகத்தில் இருக்கிறாரென்றும், அவரிடத்தில் பட்சபாதம் இல்லையென்றும் அறிந்து.'' எல்லா நியாயாதிபதிகளுக்கும் நியாயாதிபதியாகப் பாரபட்சம் இல்லாம லிருக்கின்ற அவர், ஒரு வேலை தருபவராக நீங்கள் எவ்வாறு இருக்கின்றீர் கள் என்பதைக் கவனித்துக் கொண்டிருக்கின்றார். நீங்கள் ஒரு முதலாளி யாக இருக்கின்றீர்கள் என்பதினால் மட்டும் வேலையாட்களை நீங்கள் மோசமாக நடத்துவதை அவர் கண்டும் காணாமல் விட்டு விட மாட்டார். நாம் மற்றவர்களிடத்தில் நடந்துக் கொள்வதைப் பற்றி எப்பொழுதும் அவர் நம்மைக் கணக்கொப்புவிக்கும்படி செய்கின்றார்.

## முடிவுரை

ஞாயிற்றுக் கிழமையன்று கிறிஸ்தவராக இருக்கின்ற ஒருவர் திங்கட் கிழமையன்றும் கிறிஸ்தவராக இருக்க வேண்டும். ஆராதனையில் கிறிஸ்தவ ராக இருக்கின்ற ஒருவர் வேலையிலும் கிறிஸ்தவராக இருக்க வேண்டும்.

நம்மில் பலர் வேலை செய்கின்றவர்களாக இருக்கின்றோம். நம்மில் சிலர் வேலை செய்பவர்களாகவும், மற்றும் சிலர் வேலைக்காரர்களுக்குப் பொறுப்பாளர்களாகவும் இருக்கின்றோம். நாம் யாவருமே தேவனுடைய வசனம் கூறுவதென்ன என்பதைப் பற்றி நினைத்துப்பார்ப்பது அவசியமான தாக உள்ளது. நீங்கள் பின்வரும் கேள்விகளை உங்களிடத்திலேயே கேட்டுக் கொள்ளுங்கள்:

- "தேவனுக்கு மகிமை கொண்டுவரும் வகையில் நான் நடந்து கொள்கின்றேனா?"
- "மிக மேன்மையான தன்மைக்கு என்னை நான் ஒப்புக் கொடுத்துள்ளேனா?"
- "பிறரிடம் நான் இரக்கத்துடன் மற்றும் அவர்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு நடக்கின்றேனா?"
- "நான் எனது மேலாளர்களுக்கு நேர்மையான, நாணயமாக மற்றும்

*மதிப்பளிப்பவனாக இருக்கின்றேனா?"*

- *"நான் எனது வேலையின் மூலம் அளித்தவற்றுக்காக இயேசு என்னிடத்தில் 'நன்கு செய்தீர்கள்' என்று கூறுவாரா?"*

*இந்தக் கேள்விகள் யாவற்றுக்கும் நேர்மையாகப் பதில் தந்த பின்பு, நீங்கள் சில பாவங்களை அறிக்கையிட்டு தேவனிடத்தில் மன்னிப்புக் கேட்க விரும்பலாம். நாம் வேலையில் செய்கின்றவை உட்பட, நாம் செய்கின்ற எல்லாவற்றின் மூலமாகவும் தேவனை மகிமைப்படுத்துவதற்கு நம்மை ஒப்புக் கொடுப்போமாக.*

---

*குறிப்பு*

[1]John R. W. Stott, *The Message of Ephesians: God's New Society,* The Bible Speaks Today, gen. ed. John R. W. Stott (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1979), 252.